17. (அ) தமிழ் எழுத்தாளர்களை ஆங்கில எழுத்தாளர்களுடன் ஒப்பிடும் போக்குத் தமிழில் தோன்றியதைப் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இந்திய இலக்கியங்களுக்கிடையே ஒப்பீட்டாய்வுகள் நிகழ்த்தப் பெற்ற பாங்கினை எடுத்துக் காட்டுக.

18. (அ) ஒப்பிலக்கிய ஆய்வுக்கு இரு மொழி அறிவின் இன்றியமையாமை பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இலக்கிய ஒருமைக் கோட்பாடு பற்றிச் சான்றுடன் விளக்கிக் கட்டுரை வரைக.

19. (அ) வாய்மொழி இலக்கியங்களின் பொதுப் பண்புகள் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) எழுத்திலக்கியங்களில் வாய்மொழி இலக்கியத்தின் தாக்கம் பற்றிக் கட்டுரை வரைக.

20. (அ) தமிழ் நீதிப் பாடல்கள் குறித்து ஒப்பிலக்கிய நோக்கில் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) நாடகப் பாடல்கள் பற்றிக் கட்டுரை வரைக.



**Reg. No. : ..............................**

**Code No. : 7048** **Sub. Code : C 3 AT**

M.A.(CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2011.

Third Semester

Tamil

விருப்பப் பாடம் – ஒப்பிலக்கியக் கோட்பாடுகள்

(For those who joined in July 2008 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. "அறிவியல் அறிஞருக்குப் பெயர்களின் மீதே அக்கறை : அவற்றின் பொதுமதியில் அன்று" என்று கூறிய ஒப்பியல் அறிஞர் யார்?

2. ஒப்பு இலக்கியம் என்ற செறிவுடைய தொடரைத் தமிழில் முதன் முதலில் பயன்படுத்திய அறிஞர் யார்?

3. ஆல்பர்ட் ஜெரார்டு ஒப்பிலக்கியத்திற்குக் கூறிய விளக்கம் என்ன?

4. வான் தீகம் என்ற பிரெஞ்சுப் பேராசிரியர் ஒப்பிலக்கியத்தின் செல்நெறி எவ்வாறிருக்க வேண்டும் என்கிறார்?

5. முருகியல் அடிப்படை ஒப்பீடு என்றால் என்ன?

6. 'பிறப்புறவு ஆய்வு முறை' என்றால் என்ன?

7. ஹோமரின் காப்பியங்கள் வாய்மொழி வடிவத்திலிருந்து எழுத்து வடிவம் பெற்றவை என்று நிறுவிய அறிஞர் யார்?

8. இலக்கிய வகைமை என்றால் என்ன?

9. தன்னுணர்ச்சிப் பாடல்களைக் குறிக்கும் 'lyric' என்ற சொல் எச்சொல்லின் அடியாகப் பிறந்தது?

10. தமிழில் இயற்கைப் பாடல்கள் எத்தகைய அடிப்படைகளில் பிறக்கின்றன?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் 200 சொற்களில் விடை தருக.

11. (அ) மனித இனப் பொதுமை காரணமாகவே இலக்கியங்களிடையே பொதுத் தன்மை காணப்படுகிறது என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) உலக இலக்கியமும் ஒரு மொழி இலக்கியமும் எங்ஙனம் முதலும் சினையுமாக அமைகின்றன?

12. (அ) உலக இலக்கியம் என்ற தொடரின் பொருளமைதியை விளக்கிச் சான்று காட்டுக.

(அல்லது)

(ஆ) பிரெஞ்சு மொழியில் ஒப்பிலக்கியம் என்ற தொடர் பெற்ற வளர்ச்சியை எடுத்துக்காட்டுக.



13. (அ) ஒப்பிலக்கியத்தில் தாக்குரவு ஆய்வு பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) இணைநிலை ஆய்வு (Parallel study) பற்றிச் சான்றுடன் விளக்குக.

14. (அ) இலக்கிய வகையின் வரலாறே இலக்கிய வரலாறு ஆகும் என்ற சிந்தனையை எடுத்துக்காட்டுக.

(அல்லது)

(ஆ) 'இலக்கிய வகைக் கல்வி இலக்கியத்தின் அகவளர்ச்சிக்கு நம்மை ஈர்த்துச் செல்கிறது' - இக்கருத்தை விளக்குக.

15. (அ) தன்னுணர்ச்சிப் பாடல்களில் குழுப்பாடல் (Choral) பற்றிக் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) போற்றிப் பாடல்கள் (odes) என்றால் என்ன? விளக்கம் தருக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

கட்டுரை வடிவில் 500 சொற்களில் விடை தருக.

16. (அ) ஒப்பிலக்கியத்தின் பரந்துபட்ட எல்லைப் பரப்பினை விளக்கிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) உலக நாடுகளில் ஒப்பிலக்கியத்தின் செல்நெறி தொடக்க நிலையில் எவ்வாறிருந்தது?